**தெற்கு வீதி இணைப்பு செயற்திட்டம் - 2019**

---

தெற்கு வீதி இணைப்பு செயற்திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2014 மே 27 ஆந் திகதிய 3027-எஸ்ஆர்ஐ (எஸ்எப்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

---

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், தற்போது வீதி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு என அழைக்கப்படுகின்ற முன்னைய துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு செயற்திட்ட நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. தெற்கு நெடுஞ்சாலையில் இணைக்கப்பட்ட வீதிகளின் 45.52 கிலோமீற்றர்களை மேம்படுத்தி புனரமைத்தல் மூலம் தேசிய போக்குவரத்து வினைத்திறனை முன்னேற்றுவது செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 12,248 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 95 மில்லியனென மதிப்பிடப்பட்டது, அதில் ரூபா 9,025 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 70 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2014 ஒகஸ்ட் 22 ஆந் திகதி ஆரம்பித்திருந்ததுடன் 2018 திசெம்பர் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது. இருப்பினும், செயற்திட்டத்தின் நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கள் திகதி 2021 ஜுன் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

---

செயற் திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாரா நிதி நிலைமையியும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்கீட்டுக் குறைபாடுகள் | தொகை ரூபா மில்லியன் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இல:08 இன் பந்தி 44 இன் பிரகாரம், ஒரு ஏற்பாடாக அங்கீகரிக்கப்பட்ட தொகை அறிக்கையிடல் திகதியில் தீர்க்கப்படவேண்டிய பொறுப்புக்களின் செலவுகளின் சிறந்த மதிப்பீடாக காணப்படல் வேண்டும். இருப்பினும், மேற்கூறிய தேவைப்பாடுகளிற்கு முறணாக, செயற்திட்டமானது ஒப்பந்தப்பொதி 02 இன் 2019 நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களிற்கான இரண்டு இடைக்கால கொடுப்பனவு பத்திரங்களிற்கெதிரான ஒப்பந்ததாரர்களிற்கு செலுத்த வேண்டிய கணக்கிற்கு ரூபா 17.85 மில்லியன் தொகையான குறை ஏற்பாட்டினை செய்திருந்தது. | 17.85 | நடைமுறை வேலைக் கணக்கு மற்றும் ஒப்பந்ததாரரிற்கு செலுத்தவேண்டிய கணக்கு போன்றவற்றில் குறைமதிப்பீடு. | ஏற்பாடு ஒதுக்கீட்டு கணக்கு தயாரிக்கும் நேரத்தில் ஆலோசகரினால் தரப்பட்ட தொகையின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2019 நவம்பர் மற்றும் திசெம்பர் இற்கான செய்து முடிக்கப்பட்ட வேலை ஏற்பாடு செய்யும் நேரத்தில் வசூலிக்கப்பட்டிருக்கவில்லை. எனவே, குறை ஏற்பாடு ரூபா 17.85 மில்லியன் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. | நிதிக் கூற்றுக்களில் ஏற்பாடுகளை வழங்கும் போது இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இல: 08 இனை பின்பற்ற நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**3.** **பௌதீக முன்னேற்றம்**

**3.1** **செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்**

| இல | உருப்படி /உப உருப்படி | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | தாமதம்/ கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|---|---|
| | | எதிர்பார்க்கப் பட்ட பௌதீக செயலாற்றல் | அடையப்பெற்ற செயலாற்றல் | | | | |
| (அ) | கிருலப்பன - கோமாகம மற்றும் கெஸ்பவே - பொகுனுவிட ஆகிய வீதிகளின் வீதி நிர்மான வேலைகள் | 100 % | 98% | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒப்பந்தப் பொதி 2 மற்றும் 4 நிர்மான வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. | தாமதத்துடன் வீதி புனர்நிர்மான வேலைகளை பூர்த்தி செய்வதற்கு செயற்திட்டத்தின் கிரயம் அதிகரிப்பதற்கும் சாத்தியம். | ஒப்பந்தப்பொதி - 02 இன் கீழான கிருலப்பன - கோமாகம வீதியின் 16.18 கி.மீ களின் புனர்நிர்மான வேலைகள் 2020 பெப்ரவரி 29 அளவிலேயே பூர்த்தியாக்கப்பட்டிருந்தன. ஒப்பந்தப்பொதி - 04 இன் கீழான அம்பத்தள தொடக்கம் சினேக் சந்தி வரையான 1.88 கி.மீ களின் புனர்நிர்மான வேலைகள் நிலுவையிலுள்ள சில வேலைகள் முடிந்ததும் கையளிக்கப்படும். தாமத கட்டணங்கள் தாமதத்திற்காக கழிக்கப்பட்டிருந்தன. | இலக்கிடப்பட்ட திகதிகளில் வேலைகளை பூர்த்திசெய்யவும் வீதி புனர்நிர்மான நடவடிக்கைகளை துரிதப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | அம்பத்தல சினேக் சந்தி வீதியின் புனரமைப்பு வேலைகள். | 100% | 99% | | | | |

**3.2 ஒப்பந்த நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| இல | கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | பொதி 03 இன் மாற்றியமைக்கப்பட்ட ஒப்பந்த பெறுமதி ரூபா 2,056 மில்லியனாக இருந்த போதிலும், ஒப்பந்ததாரர் உறுதிப்படுத்திய கொடுப்பனவுகள் ரூபா 223.8 மில்லியன் அதிகரித்த தொகையான ரூபா 2,279.8 மில்லியன் வரை அதிகரித்து காணப்பட்டது. அதன் பெறுபேறாக, இடைக்கால கொடுப்பனவு பந்தி இல: 29 இன் கீழ் 2019 ஜூன் 24 இல் சமர்ப்பிக்கப்பட்ட இறுதி கொடுப்பனவுடன் தொடர்புபட்ட ரூபா 248.6 மில்லியன் செயற்திட்டத்தினால் திர்க்க முடியாமல் போயிருந்ததுடன் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட செலுத்தவேண்டிய பொறுப்பாக காணப்பட்டது. மேலும், இடைக்கால கொடுப்பனவு விண்ணப்ப இல 30 மேற்கூறிய ஐபிசி 29 இன் கொடுப்பனவின் மீதான தாமதத்திற்கான வட்டியினை பெற்றுக்கொள்ள 2019 ஒக்டோபர் 31 இல் ஒப்பந்ததாரரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | தாமத கொடுப்பனவுகள் மீதான வட்டியின் அதிகரிப்பு காரணமாக செயற்திட்டத்தின் கிரயம் அதிகரிப்பதற்கான சாத்தியம். | 2018 ஒக்டோபர் 25 இலான பிபிசீ பிரமானத்தின் பிரகாரம், மாற்றியமைக்கப்பட்ட ஒப்பந்த தொகை ரூபா 2,056 மில்லியனிற்கான அனுமதி உண்மையான ஒப்பந்த தொகை 1,796 மில்லியனிற்கு அதிகமாக பிபிசீ இனால் வழங்கப்பட்டிருந்தது. | வட்டி கிரயங்களை குறைப்பதற்கு ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் தாமதம் இல்லாமல் பொறுப்புக்களை கொடுத்து தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | பொதி 01 இன் ஒப்பந்ததாரரிடமிருந்து திரும்பப்பெறப்பட்ட ரூபா 31.95 மில்லியன் தொகையான தாமத கட்டணங்கள் 2019 நவம்பரில் இடைக்கால கொடுப்பனவு பத்திர இல: 16 இன் கீழ் ஒப்பந்ததாரரிற்கு பின்னர் வீடுவிக்கப்பட்டிருந்தது. இருப்பினும்இ தாமத கட்டணங்களை வீடுவிப்பதற்கான ஆலோசகரின் அனுமதி கையெடுத்தல் பத்திரத்துடன் ஒப்பந்ததாரரிற்கு வழங்கப்பட்ட சமூகமளிக்கப்படாத மிகுதி வேலைகள் பட்டியல் காரணமாக வழங்கப்பட்டிருக்கவில்லை. மேலும், ஒப்பந்ததாரரினால் வழங்கப்பட்ட செயற்றிறன் பாதுகாப்பு 2018 ஜூலை 13 இல் காலாவதியாக காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | பலவீனமான உள்ளககட்டுப்பாட்டு முறைமை. | ஈஒடி ஆனது ரூபா 31.95 மில்லியன் தாமத கட்டணங்களை விடுவிப்பதற்கு முன்னர் அனுமதிக்கப்பட்டிருந்தது (அனுமதியின் பிரதி உங்களது குறிப்பிற்காக இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது) ஒப்பந்ததாரர் ஈஒடி இனை பெற்றுக்கொள்வதற்கு வீதி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளரிற்கு ஒரு வேண்டுகோலினை சமர்ப்பித்திருந்தது. செயலாளர் இவ் ஈஒடி பெறுவளவினை மதிப்பீடு செய்ய ஒரு குழுவினை நியமித்து ஈஒடி இனை அருட்கொடை அடிப்படையில் அனுமதித்துமிருந்தார். செயலாற்றல் பாதுகாப்பானது நிர்மானம் மற்றும் ஒப்பந்தத்தின் குறைநிரப்பு பொறுப்பு காலம் என்பவற்றைஈடு செய்திருந்தது. இது செயல்திறன் அடிப்படையிலான பராமரிப்பு காலத்திலும் அடங்கும், மேலும் அதை சமர்ப்பிக்க ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது. | ஒப்பந்த உடன்படிக்கையில் நிர்மானிக்கப்பட்டிருந்த கொடப்பனவு நிபந்தனை பின்பற்றப்படல் வெண்டும். ஆலோசகரின் அனுமதிகள் ஒப்பந்ததாரரிற்கான ஒவ்வொரு கொடுப்பனவுகள் மீதும் பெறப்பட்டிருத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | ஒப்பந்தப்பொதி - 01 இன் கீழான ரூபா 134.32 மில்லியன் பெறுமதியுடைய அளவைப்பட்டியலிலுள்ள 235 உருப்படிகளின் கீழான நிர்மான வேலைகள் மற்றும் ஒப்பந்தப்பொதி - 03 இன் கீழான ரூபா 150 மில்லியன் பெறுமதியுடைய அளவைப்படடியலிலுள்ள 198 உருப்படிகளின் கீழான வேலைகள் என்பன ஒப்பந்ததாரரினால் செய்து முடிக்கப்பட்டிருக்கவில்லை. இதனால், ஒப்பந்தப் பொதிகளின் பொறியியலாளரின் மதிப்பீடுகள் ரூபா 42.65 மில்லியன் பெறுமதியான செய்து முடிக்கப்படாத வேலைகளிற்கான வேலை முற்பணங்களை பெற்றுக்கொள்வதன் மீது ஒப்பந்ததாரர் மேலதிக நன்மைகளை பெற்றுக்கொள்வதனை அனுமதிப்பதனூடாக சரியான முறையில் தயாரிக்கப்பட்டிருக்காமையை அது வெளிப்படுத்தியது. | ஒப்பந்தக் கிரயம் அதிகரிப்பதற்கான சாத்தியப்பாடு. | பொறியியலாளர் மதிப்பீடுகள் வெளிக்கள விஜயம் மற்றும் வெளிக்கள புலனாய்வு அதேபோல் சில எடுகோல்கள் போன்றவற்றின் பின்னர், இருக்கும் விபரங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், தளத்திள் வேலைகளை ஆரம்பிக்கும் போது சில விலகல்கள் இருக்கலாம் என்பதுடன் சில உருப்படிகளின் செய்து முடிக்க வேண்டி இல்லாமலும் இருக்கலாம். சில புதிய உருப்படிகள் சேர்க்கப்படலாம் என்பதுடன் தற்போது காணப்படுகின்ற சில உருப்படிகளின் அளவும் அதிகரிக்கலாம். குறைந்த செலவில் நல்ல தரமான வீதி ஒன்றினை கட்டியெலுப்புவதற்கான எண்ணத்துடன்தளத்தில் சில முடிவுகள் எடுக்கப்படல் வேண்டும். ஒப்பந்தப் பொதி - 01 மற்றும் ஒப்பந்தப்பொதி - 03 இன் கீழான வேலை ஆரம்பிப்பு முற்பணம் செய்து முடிக்கப்படாத உருப்படிகளின் பெறுமதி பி.ஐ.கியுவ் விலுள்ள ஏனைய உருப்படிகளில் ஈடுசெய்யப்பட்டதனால் மேலதிகமாக செலுத்தப்பட்டிருக்கவில்லை. | அளவைப்பட்டியலினை தயாரிப்பதற்கு முன்னர் விபரமான பொறியியல் கற்கை மற்றும் மண் பரிசோதனையை நடாத்த வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம், அரசாங்கத்திற்கு உரித்தான 548 காணித்துண்டுகள் உள்ளடங்களாக 3,558 காணித்துண்டுகளை கொள்வனவு செய்ய பட்டியலிடப்பட்டிருந்ததுடன் அதில் 2,590 காணித்துண்டுகளிற்காக ரூபா 3,205.3 மில்லியன் தொகையான இழப்பீடுகள் காணி சுவீகரிப்பு சட்டத்தின் பிரிவு 17 இன் கீழ் செலுத்தப்பட்டிருந்தது. மேலும், ரூபா 1,742.47 தொகையான மேலதிக கொடுப்பனவுகள் காணி சுவீகரிப்பு மீள வழங்கள் குழுவின் தீர்மானத்தின் கீழ் அதன் மீது செய்யப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக, மொத்தமாக ரூபா 2.24 மில்லியன் 2019 திசெம்பர் 31 வரை இழப்பீடுகள் கொடுப்பனவுகள் மீதான தாமதத்தின் மீது வட்டியாக செலுத்தப்பட்டிருந்தது. | இழப்பீட்டு கொடுப்பனவுகள் மீது மேலதிக கிரயங்கள் ஏற்படுவதற்கான சாத்தியம். | கொடுக்கப்பட்ட தகவல்கள் சரி என்பதுடன் அதனுடன் உடன்படுகின்றேன். காணி இழப்பீட்டு செயன்முறைக்கான கொடுப்பனவு, இருக்கும் நிதியின் அடிப்படையில் மிகுதி காணித்துண்டுகளிற்காக செயன்முறையிலுள்ளது. சுவீகரிக்கப்பட்ட காணிகளிற்காக செலுத்த வேண்டிய வட்டி கொடுப்பனவு காணி சுவீகரிப்பு சட்டத்தின் பிரிவு 44 இன் கீழ் பதிவு செய்வதற்கு முன்னர் முலுமையாக தீர்க்கப்படல் வேண்டும். | காணி சுவீகரிப்பின் மிகுதி வேலைகளின் பூர்த்தியாக்கல் மீதான நடைமுறையை துரிதப்படுத்த செயற்திட்த்தினால் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |